செய்தி வெளியீடு எண்: 425 நாள் : 06.08.2013

**செய்தி**

- **பொது விநியோகத் திட்டம் செம்மையாக செயல்பட அறிவுரை**
- **கடமை தவறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை**
- **பண்ணை பசுமை நுகர்வோர் கூட்டுறவு காய்கறிக் கடைகளில் நவின் தக்காளி ரூ.25லிருந்து ரூ.20 ஆகவும், சாம்பார் வெங்காயம் ரூ.60லிருந்து ரூ.50 ஆகவும் குறைக்க உத்தரவு**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூார் கே.ராஜூ அவர்கள் தலைமையில் அனைத்து துணைப்பதிவாளர் (பொதுவிநியோகத் திட்டம்)களுடனான ஆய்வு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூார் கே.ராஜூ அவர்கள் தலைமையில் இன்று **(6.8.2013)** தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய கூட்ட அரங்கில் அனைத்து கூட்டுறவு நியாயவிலைக்கடைகளின் செயல்பாடுகள், மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் போன்றவை குறித்து அனைத்து துணைப்பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்)களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகையில், பொதுவிநியோகத் திட்டத்தை முறையாகச் செயல்படுத்தி அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அனைத்துப் பொருட்களும் தங்கு தடையின்றி விநியோகம் செய்யப்பட வேண்டும் என்றும், நுகர்பொருள் வாணிபக் கழகத்திலிருந்து தரமுள்ள அரிசியை மட்டுமே நியாயவிலைக் கடைகளுக்கு அனுப்ப வேண்டும் என்றும், தரமற்ற அரிசி அனுப்பப்பட்டாலோ அல்லது விநியோகிக்கப்பட்டாலோ, அதை கண்டறியப்பட்டால் அதற்கு பொறுப்பான அலுவலர் மற்றும் பணியாளர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எச்சரித்தார்.

மேலும் அனைத்து கூட்டுறவு நியாயவிலைக் கடைகளிலும், அந்தந்த மாதத்திற்குரிய ஒதுக்கீட்டு ஆணையின் நகல் பொதுமக்களுக்கு நன்கு தெரியும்படி வைக்கப்பட வேண்டும். எடைகுறைவு, பொருட்களை இருப்பு வைத்துக் கொண்டு குடும்ப அட்டைதாரர்களிடம் சரக்கு இருப்பு இல்லை எனக் கூறுவது, உளுந்து, துவரம் பருப்பு, பாமாயில், மண்ணெண்ணெய் போன்ற பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு சரியாக விநியோகம் செய்யாமலிருப்பது ஆகிய செயல்களில் ஈடுபடுவோர் மீது தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுக்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

நியாயவிலைக் கடைகளில் எந்தப் பொருளும் இருப்பு இல்லை எனும் நிலை ஏற்படக் கூடாது எனவும், வழங்கல் அலுவலரால் ஒதுக்கீடு செய்து வழங்கப்படும் பொருட்கள் முழுவதையும் நகர்வு செய்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட வேண்டும் எனவும், ஆய்வுப் பணியைத் தீவிரப்படுத்தி பொதுவிநியோகத் திட்டம் செம்மையாகச் செயல்பட வேண்டும் எனவும், இப்பணியில் கடமை தவறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பொதுவிநியோகத் திட்ட துணைப்பதிவாளர்கள், மாநிலம் முழுமையும் பொது விநியோகத் திட்டத்தை ஆய்வு செய்து, பின்னர் அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் பொது அங்காடி விலையையும் கேட்டறிந்தார்.

இதனை தொடர்ந்து, பண்ணை பசுமை நுகர்வோர் காய்கறி கடைகளில் காய்கறி விற்பனை விலை மற்றும் வெளிமார்க்கெட்டில் காய்கறி விலையை கேட்டறிந்த பின்பு **பண்ணைப் பசுமை நுகர்வோர் காய்கறிக் கடைகளில் விற்கப்படும் நவின் தக்காளி விற்பனை விலையை ரூ.25–லிருந்து ரூ.20–ஆக உடனடியாகக் குறைக்க உத்திரவிட்டார். சாம்பார் வெங்காயம் கிலோ ரூ.60–லிருந்து ரூ.50–ஆக குறைக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்திரவிட்டார்.ள**

மேலும் மாவட்டத்திலுள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளும் குறுந்தகவல் (SMS) அனுப்பும் முறையை தவறாது ஆகஸ்ட் 2013 இறுதிக்குள் இணைந்து உரிய தகவல்களை உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும்.

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் திருமதி எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு.பெ.சீத்தாராமன், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திரு.இரா.கார்த்திகேயன், திரு.கே.ராஜேந்திரன், இணைப்பதிவாளர் டாக்டர் நா.வில்வசேகரன் மற்றும் துணைப்பதிவாளர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**